Dina Mani
Chola opens 4 branches in Karnataka
Edition: Chennai Date: 05/08/2016 Page no: 15 Clip size: H: 10 cm / W: 9 cm
India Media Monitor

# சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட்: கிளைகளை அதிகரிப்பதில் தீவிரம்

**சென்னை, ஆக. 4:** நாடு தழுவிய அளவில் கிளைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இதுகுறித்து சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் பைனான்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வெள்ளையன் சுப்பையா தெரிவித்ததாவது:

சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனத்தின் கிளைகளின் எண்ணிக்கை தற்போது 571-ஆக உள்ளது. இதனை நடப்பு நிதி ஆண்டின் இறுதிக்குள் 700-ஆக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதி ஆண்டில் மட்டும் 150 கிளைகளைத் திறக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, கர்நாடகத்தில் பீனியா, ராம்நகரா, பொம்மனஹள்ளி மற்றும் தேவனஹள்ளி ஆகிய நான்கு இடங்களில் புதிதாக கிளைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதையடுத்து, கர்நாடகத்தில் மட்டும் நிறுவனத்தின் கிளைகளின் எண்ணிக்கை 37-ஆக அதிகரித்துள்ளது. நாடு தழுவிய அளவில் கிளைகளின் விரிவாக்கத்தால் நிறுவனத்துக்கும் வாடிக்கையாளருக்குமான நெருக்கம் மேலும் அதிகரிக்கும்.

சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் நிறுவனத்தின் 70 சதவீத கிளைகள் ஊரகப் பகுதிகளிலும், 20 சதவீதம் புறநகர் பகுதிகளிலும், 10 சதவீதம் நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.